**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

<table>
<tr><td>Calender</td><td></td><td rowspan="5">CC.No.31/2021</td></tr>
<tr><td>Miscellaneous</td><td></td></tr>
<tr><td>Preliminary Register</td><td></td></tr>
<tr><td>Sessions</td><td></td></tr>
<tr><td>Deposition of witnesses for</td><td>அ.சா.1</td></tr>
<tr><td>Name:</td><td>சரண்யா</td><td>Caste</td></tr>
<tr><td>Father's Name</td><td>சுப்பையா</td><td>Calling</td></tr>
<tr><td>Village</td><td></td><td>Religion</td></tr>
<tr><td>Taluk</td><td></td><td>Age</td></tr>
</table>

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 2-2021.**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அறந்தாங்கி அத்தாணி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது வீட்டில் தான் இருக்கிறேன். எதிரி குமார் என்ற உதயக்குமாரை எனக்குத் தெரியும். அவர் சம்பவத்தின் போது எனது கணவர் தற்போது எனக்கும் எதிரி குமார் என்ற உதயக்குமாருக்கும் விவகாரத்து ஆகிவிட்டது. எனக்கும் எதிரி குமாருக்கும் இடையே கருத்துவேறுபாடு இருந்ததால் நாங்கள் தனியாக இருந்தோம். நான் அறந்தாங்கியில் எனது அம்மா வீட்டில் வசித்து வந்தேன். அறந்தாங்கியில் ஒரு ஆடி,ட்டர் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தேன். நான் வேலை பார்த்த இடத்தில் 29-12-2017 அன்று எதிரி குமார் அங்கு வந்து என்னை அருவாளால் வெட்டி அசிங்கமாக பேசினார். அது சம்மந்தமாக நான் சிகிச்சை பெற்றேன். அந்த சம்பவம் தொடர்பாக எதிரி குமார் மீது ஒரு வழக்கு பதிவு செய்து போலிசார் எதிரி குமாரை கைது செய்தார்கள். அதன் பிறகு சிறையிலிருந்து எதிரி உதயக்குமார் ஜாமினில் வெளியே வந்தார். அந்த சமயத்தில் நான் அத்தாணியில் என் அம்மா வீட்டில் வசித்து வந்தேன். கடந்த 20-08-2019 அன்று இரவு 7 மணியளவில் நானும் எனது இரண்டு வயது குழந்தையுடன் வீட்டின் வெளியே இருந்தேன். அப்போது அங்கு ஜாமினில் வெளியே வந்த எதிரி குமார் கையில் அருவாளுடன் வந்து தேவடியா மகளே அன்றைக்கு தப்பி விட்டாய் உன்னை கொள்ளாமல் விடமாட்டேன் என்று சொல்லி என்னை தள்ளிவிட்டார். - நான் கீழே விழுந்து விட்டேன் அங்கிருந்த ஜன்னல் ,

ஆஸ்பெட்டாஸ் சீட், கதவு, ஆகியவற்றை அறிவாளால் வெட்டி உடைத்தார். என்னை எனது அம்மா, அப்பா சேர்ந்து உள்ளே கொண்டு போய் விட்டார்கள். நான் சம்பவம் தொடர்பாக அறந்தாங்கி போலீஸ்க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். 1/2 மணி நேரத்தில் போலிசார் வந்தார்கள். அதற்குள் எதிரி அந்த இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டார். சம்பவம் தொடர்பாக நான் மறுநாள் காலை அறந்தாங்கி காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் எழுத்து மூலப் புகாரில் உள் ள கையெழுத்து என்னுடையது தான். அந்த எழுத்து மூலப் புகார் அ.சா.ஆ.1. ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

என்னை எதிரி 2017 ஆம் வருடத்தில் தாக்கியதாக சொன்ன நாளுக்கு முன்பு எத்தனை நாட்களாக நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்று சொன்னால் 2015 ஆம் வருடம் திருமணம் நடந்தது. திருமணம் ஆன 3 மாதத்தில் நாங்கள் பிரிந்து விட்டோம். எதிரியின் சொந்த ஊர் பேராவூரணி என்று சொன்னால் சரிதான். எனது ஊர் கம்மங்காடு என்று சொன்னால் சரிதான். நாங்கள் பிரிந்து வாழ்ந்த பின்பு பெரியோர்கள் மூலம் சேர்ந்து வாழ இரு தரப்பிலும் நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் சேர்ந்து வாழ நடவடிக்கைகள் எடுத்தேன். அறந்தாங்கி ஆடிட்டர் அலுவலகத்தில் நான் வேலைக்குச் செல்வது பிடிக்காமல் எதிரி என்னை கண்டித்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று சொன்னதற்காகத்தான் எனக்கும் எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னை வேலைக்குச் சொல்ல வேண்டாம் என்று சொன்னார் என்று சொன்னாலும் அதை நான் கேட்கவில்லையென்று சொன்னாலும் சரியல்ல. 2017 சம்பவத்தில் எதிரி சிறைக்குச் சென்ற பின்பு எதிரியை குண்டாஸ் நடவடிக்கையில் சிறையில் அனுப்ப நடவடிக்கைகள் எடுத்தோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எதிரியை குண்டாஸ் தடுப்பு சட்டத்தில் சிறையில் வைப்பதற்கு நானும் எனது குடும்பத்தார்களும் நடவடிக்கைகள் எடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் எதிரி மீது விவகாரத்துக் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் என்னை எதிரி வெட்டியதற்கு பின்பு தான் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்தேன். விவகாரத்து வழக்கில் எதிரி ஆஜராகாததால் எனக்கு சாதகமாக ஒரு தலை பட்ச உத்தரவு ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். விவகாரத்து வழக்கு நான் தாக்கல் செய்ததற்கு முன்பாகவே எதிரி சிறையில் தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். எதிரி என்னிடம் தகராறு செய்ததாக சொல்லும் சம்பவம் பற்றி அக்கம் பக்கத்தினருக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1. எழுத்து மூலப் புகார் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று சொன்னால் காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது. நான் காவல்

நிலையத்திற்கு செல்வதற்கு முன்பே அ.சா.ஆ.1. புகார் தட்டச்சு செய்யப்பட்டு வைக்கப்பட்டு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதி கொடுத்ததன் பேரில் தட்டச்சு செய்யப்பட்டது. அ.சா.ஆ 1 புகாருடன் நான் எழுதியதாகச் சொல்லும் புகார் இல்லையென்று சொன்னால் என்னால் கையில் வெட்டுப் பட்டு கை மடக்கமுடியாததால் எழுத முடியாது. அதனால் நான் சொல்ல தட்டச்சு செய்தார்கள். சம்பவத்தை எனது அம்மா, அப்பா தவிர்த்து வேறு நபர்கள் பார்க்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியுடன் வாழ பிடிக்காமல் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை பொய்யாக வழக்கில் சிக்கவைப்பதற்காக அ.சா.ஆ.1. புகாரை பொய்யான விபரங்களுடன் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவத்தின் போது எதிரி எங்கள் வீட்டிற்கு வரவில்லையென்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தில் ஈடுபடவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் தவறான பழக்கவழக்கங்களில் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அதனை தட்டிக் கேட்டார் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.31/2021** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.2 | |
| **Name:** | கண்ணகி | **Caste** |
| **Father's Name** | க/பெ,சுப்பையா | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 2-2021.**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அறந்தாங்கி அத்தாணி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1. சரண்யா எனது மகள் ஆவார். எதிரி குமார் எனது மகளின் கணவர் ஆவார். தற்போது எனது மகளுக்கும் எதிரிக்கும் விவகாரத்து ஆகிவிட்டது. கடந்த 20-08-2019 அன்று இரவு 7 மணியளவில் எதிரி குமார் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களையும் எங்கள் குடும்பத்தையும் அசிங்கமாக தேவடியா என்று அசிங்கமாக பேசினார். நாங்கள் வீட்டில் புழங்கிக் கொண்டு இருந்தோம். வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. என்னவென்று பார்த்த போது என் மகள் அ.சா.1. சரண்யா எதிரி குமார் அருவாளுடன் வருகிறார் என்று சத்தம் போட்டுக் கொண்டே வந்தார். நாங்கள் உள்ளே வந்து விட்டோம். எதிரி தேவடியா வெளியே வாடி என்று அசிங்கமாக பேசினார். கையில் வைத்திருந்த அருவாளால் அங்கு இருந்த ஆஸ்பெட்டாஸ் சீட், ஜன்னல், கண்ணாடி, ஆகியவற்றை உடைத்து விட்டார். நாங்கள் போலீஸ்க்கு போன் செய்தோம். போலீஸ் வந்து எதிரியிடம் இருந்த அருவாளை பிடிங்கிக் கொண்டார்கள். எதிரி என் மகளைப் பார்த்து போலீஸ் வந்ததால் இன்றைக்கு தப்பித்துக் கொண்டாய் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொள்ளாமல் விடமாட்டேன் என்று சொன்னார். மறுநாள் காலை என் மகள் சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

2017 ஆம் வருடம் நடந்த சம்பவத்திற்கு முன்பே எதிரியும் எனது மகள் அ.சா.1 ஆகும். பிரிந்து தான் வாழ்ந்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். 2017 ல் சம்பவத்திற்கு பின்பு தான் என் மகள் எதிரி மீது விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். எதிரி அ.சா.1. ஐ வேலைக்கு செல்ல தடுத்ததால் தான் கருத்து வேறு பாடு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவர் சரியாக குடும்பம் நடத்தவில்லை. சம்பவத்தை எங்கள் வீட்டில் உள்ள நபர்கள் தவிர்த்து வேறு நபர்கள் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். எதிரி அருவாளுடன் வந்ததாலும் ஏற்கனவே பிரச்சினை செய்ததாலும் அக்கம் பக்கத்தினர் கிட்டே வரவில்லை. எதிரி உடைத்தாகச் சொல்லும் பொருள்களையோ, அதற்குறிய போட்டோக்களையோ, போலிசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைக்கவில்லை. போலிசார் வந்து பார்த்தார்கள். அ.சா.1. எதிரியுடன் வாழாமல் இருந்ததால் எங்களுக்கு எதிரி மீது கோபம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. முன் விரோதம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. வருத்தம் இருந்தத. அவ்வாறு மனஸ்தாபம் இருந்ததால் தான் எதிரி மீது என் மகள் பொய்யாக புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.31/2021** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.3 | |
| **Name:** | சுப்பையா | **Caste** |
| **Father's Name** | திருமாள்பிள்ளை | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 16-2-2021.**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அறந்தாங்கி அத்தாணி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1. சரண்யா எனது மகள் ஆவார். எதிரி குமார் எனது மகளின் கணவர் ஆவார். தற்போது எனது மகளுக்கும் எதிரிக்கும் விவகாரத்து ஆகிவிட்டது. கடந்த 29-12-2017 அன்று என் மகள் அ.சா.1. வேலைக்குச் சென்ற இடத்தில் எதிரி அவளை வெட்டிவிட்டார். அது சம்மந்தமாக எதிரி மீது வழக்கு பதிவு செய்து எதிரியை கைது செய்தார்கள் , அதன் பின்பு 20-08-2019 அன்று இரவு 7 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது வெளியே சத்தம் கேட்டது. அங்கு வந்து பார்த்த போது எதிரி அவளே, இவளே என்று திட்டிக் கொண்டு தேவடியா மகளே, குச்சிக்காரி மகளே, என்று அசிங்கமாக திட்டினார். உங்களை வெட்டிக் கொன்று விட்டு தான் செல்வேன் என்று சொன்னார். எதிரி அறிவாளை ஓங்கிக் காண்பித்தார். அறிவாளால் ஆஸ்பெட்டாஸ் சீட், ஜன்னல், கண்ணாடி, கேட், ஆகியவற்றை உடைத்து விட்டார். நாங்கள் போலீஸ்க்கு தகவல் சொன்னோம். போலிசார் வந்து விட்டார்கள். குமார் அங்கிருந்து சென்று விட்டார்கள். நாங்கள் அன்றைக்கு நைட்டே போலீஸ் ஸ்டேசன் வருவதற்கு கேட்டோம். அவர்கள் காலையில் வந்து கம்பௌயிண்ட் கொடுங்கள் என்று சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக என் மகள் அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார்

என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எனது மகள் அ.சா.1. ம் எதிரியும் திருமணம் ஆன சிறிது நாட்களிலேயே பிரித்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனது மகள் வேலைக்கு செல்வதை கண்டித்தால் தான் பிரச்சினை ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். எதிரி சொன்னதை மீறியும் அ.சா.1. வேலைக்குச் சென்று வந்தார் என்று சொன்னால் சரிதான். 2017 ஆம் வருடத்தில் எதிரி குமார் மீது குண்டாஸ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஒரு வருடமாக சிறையில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த கால கட்டத்தில் எனது மகள் எதிரி மீது விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். 2015 ஆம் வருடத்திற்கு முன்பு இரண்டு தரப்பிலும் சேர்ந்து வாழ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்று சொன்னால் சரிதான். எனது மகள் அ.சா. 1 ஐ எதிரி சரியாக வாழ வைக்காததால் எதிரி மீது மனஸ்தாபம் இருந்தது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு மனஸ்தாபம் இருந்ததால் தான் நாங்கள் எதிரிமீது அ.சா.1. மூலமாக பொய்யான புகார் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லையென்று சொன்னாலும் அசிங்கமாக பேசவில்லையென்று சொன்னாலும் கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லையென்று சொன்னாலும் பொருள்களை சேதப்படுத்தவில்லையென்று சொன்னாலும் சரியல்ல.